நலம்வேண்டி னாணுடைமை வேண்டுங் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு. (கூகூ)

மங்கலியம் விற்றும் வழாதுபணி செய்துவந்தார்
துங்கமறை தேர்கலயர் சோமேசா—வங்கண்
வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரித லின்று. (கூகூ)

மானம்

அன்றொருவை வேந்த னரிவைதனக் காவமர்க்குச்
சென்றுயிரை யீந்தான் சிவசிவா—துன்று
மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்ன
ருயிர்நீப்பர் மானம வரின். (கஎ)

அச்சுவத்த மாப்பட்டா னென்ன வமர்துறந்தான்
றுச்சி றுரோணனென்பான் சோமேசா—நச்சு
மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்ன
ருயிர்நீப்பர் மானம் வரின். (கஎ)

பெருமை

நல்லூழி நான்குமனு நாரியுட னண்ணவரி
செலவமக வானான் சிவசிவா—ஒல்லும்
பெருமை யுடையவ ராற்றுவா ராற்றி
னருமை யுடைய செயல். (கஅ)

தண்டி யடிகளிரு தாளிணைபே ணுதழிந்தார்
தொண்டராம் பேய்ச்சமணர் சோமேசா—மிண்டுஞ்
சிறியா ருணர்ச்சியு ளில்லைப் பெரியாரைப்
பேணிக்கொள் வேமென்னு நோக்கு. (கஅ)

சான்றாண்மை

தாருவன முனிவர்தம் பிழைநோக்கா தருளே
சேரநடஞ் செய்தான் சிவசிவா—ஒருமவர்
இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு. (கக)

வன்மைச் சுயோதனற்கும் வானோர் சிறைமீட்டான்
றூன்மை நெறித்தருமன் சோமேசா—பன்முறையும்
இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு. (கக)

பண்புடைமை

பார்தட் பகைமுயலைப் பற்றுதலா லென்றுமதி
தேர்ந்து மறைநீக்கான் சிவசிவா—கூர்ந்த
அரம்போலுங் கூர்மைய ரேனு மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர். (க00)

உன்பணிக்கென் றேதிநல்காச் செல்வ மூத்தியுறத்
துன்பமுற்றார் நால்வணிகர் சோமேசா—வன்புமிகும்
பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வ நன்பால்
கலந்தீமை யாற்றிரிந் தற்று. (க00)

நன்றியில் செல்வம்

நல்விசயன் கண்ணன்வர நன்மைபுரி யாமறையோன்
செல்வமிருந் தென்னுஞ் சிவசிவா—தொல்லுலகில்
நச்சப் படாதவன் செல்வ நடுவூரு
ணச்சு மரம்பழுத் தற்று. (க0க)

எல்லா மறையவர்க்கீந் தேவறியன் போலானன்
சொல்லாருங் கீர்த்திரகுச் சோமேசா—நல்லமீத
சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனைய துடைத்து. (க0க)

நாணுடைமை

சாரும் பதியிலராய்த் தாருவன மாதர்தமைச்
சேர விறைசென்றான் சிவசிவா—பாரின்மிசை
நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை
நாணா லுயிர்மருட்டி யற்று. (க0உ)

புண்ணோ டுயிர்வாழ நாணியுயிர் போக்கினன்
றுண்ணெனவே வாலிமுனஞ் சோமேசா—எண்ணியிடில்
நாணா லுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டா
னைண்டுறவார் நாணாள் பவர். (க0உ)

குடிசெயல்வகை

தூய்ய பகீரதனுந் தொல்லரச ரல்லலறச்
செய்தவமென் சொல்வாஞ் சிவசிவா—வையமதில்
நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
வில்லாண்மை யாக்கிக் கொளல். (க0ங)

மற்றிருத ராட்டிரன்சந் தானமெலா மாய்ந்ததே
சுற்றுநீர்த் தென்குளத்தூர்ச் சோமேசா—பற்றும்
இடுக்கண்கால் கொன்றிட வீழு மடுத்தூன்று
நல்லா ளிலாத குடி. (க0ங)

உழவு

வள்ளிபுனங் காத்திருந்த வாறேது வான்பயிர்செய்
தெள்ளிமையா லன்றோ சிவசிவா—உள்ளுமிடத்து
எரினு நன்றா லெருவிடுதல் கட்டபி
னீரினு நன்றதன் காப்பு. (க0ச)

வேள்வித் தொழிற்கு முழுதொழின்முன் வேண்டுமால்
சூழிசூழ் தென்குளத்தூர்ச் சோமேசா—வாழும்
உழவினார் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை. (க0ச)

நல்குரவு

மாமணியாற் கோசிகன்போய் மன்விடந்தீ ரான்வறுமைத்
தீமையினன் மீண்டான் சிவசிவா—வாழு
னறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும். (க0ரு)

நற்றருமன் வெற்றியினை நாடி விராடனெதிர்
சொற்றமொழி சோர்ந்ததே சோமேசா—கற்றறிவால்
நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும். (க0ரு)

இரவு

தருமருண மாவலிபாற் றானமெனச் சேர்ந்தான்
றிருமகி ணன்றான் சிவசிவா—பரிவின்
இரத்தலு மீதலே போலுங் காதல்
கனவிலுந் தேற்றாதார் மாட்டு. (௧௦௫)

கஞ்சாறர் சோபனப்பெண் கூந்தல் கடிதளிக்கத்
துஞ்சு மகிழ்ச்சிகொண்டாய் சோமேசா—நெஞ்சின்
இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ள
முள்ளு ளுவப்ப துடைத்து. (௧௦௬)

இரவச்சம்

ஒன்றாதவ வேட முடன்சரா சந்தன்முனஞ்
சென்றிரந்தார் மன்னர் சிவசிவா—என்றுங்
கரவா துவந்தீயுங் கண்ணன்னார் கண்ணு
மிரவாமை கோடி யுறும். (௧௦௭)

எண்ணெயிரப் பஞ்சியுட லேவருத்தித் தீபமிட்டார்
துண்ணெண் கணம்புல்லர் சேமேசா—கண்ணியிடில்
ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கிரவி னிளிவந்த தில். (௧௦௭)

கயமை

வாரி வழிதாரா வருண னடைக்கலமாய்ச்
சேரவழி செய்தான் சிவசிவா—வாருமிதஞ்
சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ். (௧௦௮)

ஏற்ற துரோணனையன் றெள்ளித் துருபதன்பின்
றோற்றுவிச யற்களித்தான் சோமேசா—போற்றிடினும்
ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்குங்
கூன்கைய ரல்லா தவர்க்கு. (௧௦௮)

தகையணங்குறுத்தல்

ஆர்ந்தசுர ரானா ரமுதணங்கைக் கண்டுமகிழ்
சேர்ந்தசுர ரானார் சிவசிவா—சார்ந்துதனை
உண்டார்க ணல்ல தடுநறாக் காமம்போற்
கண்டார் மகிழ்செய்த லின்று. (௧௦௯)

வாய்ந்ததம யந்தியுரு மாணலங்கண் டின்புற்றான்
றோய்ந்தபுக ழாளுநளன் சோமேசா—ஆய்ந்துரைக்கின்
உண்டார்க ணல்ல தடுநறாக் காமம்போற்
கண்டார் மகிழ்செய்த லின்று. (௧௦௧)

குறிப்பறிதல்

பைந்தொடியுஞ் சுந்தரரும் பார்த்தகுறிப் பாலன்றே
சிந்தையுமொன் றானார் சிவசிவா—தந்தமது
கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்க
ளென்ன பயனு மில. (௧௧௦)

காங்கேயன் வேண்ட வெறுத்துரைத்தாள் காணவர்மின்
றூங்கா வளக்குளத் தூர்ச் சோமேசா—ஆங்கண்
உறாஅ தவர்போற் சொலினுஞ் செறாஅர்சொ
லொல்லை யுணரப் படும். (௧௧௦)

புணர்ச்சி மகிழ்தல்

பார்த்தன் சுபத்திரைதன் பார்வையினான் மெய்வெதுப்புந்
தீர்த்தனைக் கொண்டான் சிவசிவா—மாதிரைநா
நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணென்னுந்
தீயாண்டுப் பெற்றா ளிவள். (௧௧௧)

மெய்த்தவத்தைக் காசிபனும் விட்டொழிந்து மாயைபாற்
சுத்தமணம் வைத்தானே சோமேசா—இத்தலத்தில்
தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொ
றாமரைக் கண்ணா னுலகு. (௧௧௧)

நலம்புனைந்துரைத்தல்

நந்து சசிமுகத்தை நாண்மதியென் றேநகுடன்
சிந்தைமகிழ் கொண்டான் சிவசிவா—முந்தும்
அறுவாய் நிறைந்த வவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து. (ககஉ)

என்றான் றிலோத்தமையை யிச்சிக்கி லாங்கவண்மெய்
தோன்றுமெழி லென்சொல்வேன் சோமேசா—வான்ற
முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு. (ககஉ)

காதற்சிறப்புரைத்தல்

காதற் குணம்விருத்த காசிவிப சித்துரைத்த
சேதித் திறமே சிவசிவா—நீதிச்சொல்
உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியே
னொள்ளமர்க் கண்ணாள் குணம். (ககந)

நாணடந்துஞ் சீதைகலப் பாற்களித்தான் பின்னயர்ந்தான்
றாநீ ரயோததியர்கோன் சோமேசா—ஆனதனால்
வாழ்த லுயிர்க்கன்ன ளாயிழை சாத
லதற்கன்ன ணீங்கு மிடத்து. (ககந)

நாணுத்துறவுரைத்தல்

சோ விரைந்துவந்துஞ் சீதை யிராமனுளங்
தேர விருந்தாள் சிவசிவா—பாரிற்
கடலன்ன காம முழந்து மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில். (ககச)

காம மிகவுழந்துந் தூதைக் கடிந்துவிட்டாள்
சோம நுதற்பாவை சோமேசா—வாமே
கடலன்ன காம முழந்து மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில். (ககரு)

அலரறிவுறுத்தல்

இந்துநுதன் மாயை விரகெண்ணி விலாசிசொலச்
சிந்தைமகிழ் கொண்டாள் சிவசிவா—புந்தி
களித்தொறூஉங் கள்ளுண்டல் வேட்டற்றாற் காமம்
வெளிப்படுந் தோறு மினிது. (௧௧௫)

ஓர்நா ளகலிகையை வேட்டின் றும்பரிறை
சோராப் பழிபூண்டான் சோமேசா—ஆராயிற்
கண்டது மன்னு மொருநா ளலர்மன்னுந்
திங்களைப் பாம்புகொண் டற்று. (௧௧௫)

பிரிவாற்றாமை

கோதைவரி விற்றடக்கைக் கொண்டல்பிரி வாற்றாமற்
சீதை வனம்போனாள் சிவசிவா—ஓதுமிடத்
தின்னா தினனில்லூர் வாழ்த லதனினு
மின்னா தினியார்ப் பிரிவு. (௧௧௬)

வாழ்விழந்த வின்னலினும் வாசவர்கோன் மிக்குநொந்தான்
சூழ்ச்சியைமுன் பிரிந்து சோமேசா—வீழ்வார்கட்
கின்னா தினனில்லூர் வாழ்த லதனினு
மின்னா தினியார்ப் பிரிவு (௧௧௬)

படர்மெலிந்திரங்கல்

மாறனொரு நாட்பிரிவின் மங்கையர்க ணீடிரவைச்
சீறி யுரைசெய்தார் சிவசிவா—கூறிக்
கொடியார் கொடுமையிற் றாங்கொடிய விந்நா
ணெடிய கழியு மிரா. (௧௧௭)

இன்பமுற்றான் மாயைதோ டோய்ந்துபின் னெண்மடங்கு
துன்பமுற்றான் காசிபன்றான் சோமேசா—அன்புடையார்க்
கின்பங் கடன்மற்றுக் காம மஃதடுங்காற்
றுன்ப மதனிற் பெரிது. (௧௧௭)

கண்விதுப்பழிதல்

நாடரிய கண்ணே நளனை விழித்தகற்றித்
தேடியழ லென்றே சிவசிவா—வோடிக்
கதுமெனத்தா நோக்கித் தாமே கலுழ்
மிதுநகத் தக்க துடைத்து. (ககஅ)

தாதையன்றித் தானேதச் சந்தனைச்சேர்ந் தின்னலுற்றாள்
சூதில் சகுந்தலைதான் சோமேசா—ஓதிற்
கதுமெனத்தா நோக்கித் தாமே கலுழ்
மிதுநகத் தக்க துடைத்து. (ககஅ)

பசப்புறுபருவரல்

மாரன்மகன் மஞ்சமுடன் வாராமுன் வாணன் மகள்
சேருநினை வாலே சிவசிவா—சார்வாற்
பசந்தா ளிவளென்ப தல்லா லிவளைத்
துறந்தா ரவரென்பா ரில். (ககக)

கேழ்வரைச் சேடியர்சொல் கீழ்மைக் கியற்படுஞ்சொற்
சூழ்பமின்றார் துன்பத்துஞ் சோமேசா—தாழ்வில்
பசப்பெனப் பேர்பெறுத னன்றே நயப்பித்தார்
நல்காமை தூற்றா ரெனின். (ககக)

தனிப்படர்மிகுதி

புல்லைமட வார்கண்ணு முன்னின் றொருமொழியாற்
செல்லறவி ரென்றார் சிவசிவா—சொல்லின்
நசைஇயார் நல்கா ரெனினு மவர்மாட்
டிசையு மினிய செவிக்கு. (கஉ0)

பன்முநிவர் பன்னியர்கள் பண்டுன்னைக் காமுறவுந்
துன்னியருள் செய்திலையே சோமேசா—உன்னதே
நாங்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாங்காதல் கொள்ளாக் சடை. (கஉ0)

நினைந்தவர் புலம்பல்

சந்தனுவுங் கங்கைதனைப் படத்திலே யெழுதிச்
சிந்தையல மந்தான் சிவசிவா—தந்தமனத்
துள்ளினுந் தீராப் பெருமகிழ் செய்தலாற்
கள்ளினுங் காம மினிது. (கஉக)

தன்னையே யுன்னுந் தமயந்தி மாதைநளன்
றன்னார்போ னீத்திருந்தான் சோமேசா—அன்னதே
தந்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணார்கொ
லெந்நெஞ்சத் தோவா வரல். (கஉக)

கனவுநிலை யுரைத்தல்

நித்திரையி லுற்றணைந்தான் ணேய னிரத்நவல்லி
சித்திரரே கைக்குச் சிவசிவா—ஒத்துரைக்கத்
துஞ்சுங்காற் றோண்மேல ராகி விழிக்குங்கா
னெஞ்சத்தா ராவர் விரைந்து. (கஉஉ)

அல்லமனை மாயை கனவி லணைந்ததனாற்
சொல்லரிய வின்பமுற்றாள் சோமேசா—நல்ல
நனவினாற் கண்டதூஉ மாங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே யினிது. (கஉஉ)

பொழுதுகண்டிரங்கல்

வாடிக் கணவனுறா வல்லிரவிற் பிங்கலையுந்
தேடிமன நொந்தாள் சிவசிவா—வோடிப்
பொருள்மாலை யாளரை யுள்ளி மருண்மாலை
மாயுமென் மாயா வுயிர். (கஉ௩)

வானவர்கோன் காமநோய் மாலைவர மிக்கதே
தூநீர்ப் புளினத்திற் சோமேசா—வானதே
காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய். (கஉ௩)

உறுப்புநலனழிதல்

வைதாள் விசயன் மருவா தருப்பசியென்
செய்வா ளயர்ந்தாள் சிவசிவா—மெய்யாக்
கொடியார் கொடுமை யுரைக்குந் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள். (கஉச)

ஓதாநா ளோதுகலை யொத்திளைத்தாள் சீதையென்றான்
சூதாரா வான்மீகி சோமேசா—கோதில்
பணைநீங்கிப் பைந்தொடி சோருந் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள். (கஉச)

நெஞ்சொடு கிளத்தல்

வண்ண வுருக்குமணி மாயன் மணம்புணர்த
றிண்ணமென வுற்றாள் சிவசிவா—உண்ணினைவிற்
செற்றா ரெனக்கை விடலுண்டோ நெஞ்சேயா
முற்றா லுறாஅ தவர். (கஉரு)

அன்பன் றுறப்பவு நாளா யினிதேடித்
துன்பந் தலைக்கொண்டாள் சோமேசா—முன்பே
இருந்துள்ளி யென்ப ரிதனெஞ்சே யரிந்துள்ளல்
பைதனோய் செய்தார்க ணில். (கஉரு)

நிறையழிதல்

அன்று வனத்தண்ண லருகே நிறையழிந்தார்
சென்றுமுனி மாதர் சிவசிவா—ஒன்ற
நிணந்தீயி லிட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ
புணர்ந்தூடி நிற்பே மெனல். (கஉசு)

கோற்றொடிவிற் பாய்போன்று கூடல் வணிகமின்னார்
தோற்றுநிறை யழித்தாய் சோமேசா—சாற்றுங்காற்
பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோநம்
பெண்மை யுடைக்கும் படை. (கஉசு)

அவர்வயின் விதும்பல்

மன்னுமுன்கே ளென்னவுஞ்சீ மந்தனிதே றுமலுளஞ்
சின்னமுற லென்றே சிவசிவா—வுன்னி
லொருநா ளெழுநாள்போற் செல்லுஞ் சேட்சென்றார்
வருநாள் வைத்தேங்கு பவர்க்கு. (கஉஎ)

சந்திரசே னன்வரவு நோக்கியுயிர் தாங்கினளாற்
சுந்தரச்சீ மந்தினிதான் சோமேசா—முந்தும்
உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்
வரனசைஇ யின்னு முளேன். (கஉஎ)

குறிப்பறிவுறுத்தல்

தூன்றிற் சுமதி குறிப்பாற் றருமகுத்தன்
சென்றுமயல் கொண்டான் சிவசிவா—வென்று
முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை
நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு. (கஉஅ)

சங்கிலிபா லாரூர ரூழிகணந் தானாகத்
துங்கமிகு மன்புவைத்தார் சோமேசா—பொங்கப்
பெரிதாற்றிப் பெட்பக் கலத்த லரிதாற்றி
யன்பின்மை சூழ்வ துடைத்து. (கஉஅ)

புணர்ச்சி விதும்பல்

மன்ன னகலிகைநீ வஞ்சனைநீங் காமலுடற்
சின்னமுற லென்றே சிவசிவா—வென்னவவற்
காணுங்காற் காணேன் றவறாய காணாக்காற்
காணேன் றவறல் லவை. (கஉகூ)

யோசனை கந்தியினைக் காண்டலும்பே ரோகைகொண்டான்
றாசனையாச் சந்தனுத்தான் சோமேசா—நேசமுடன்
உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங்
கள்ளுக்கில் காமதிற் குண்டு. (கஉகூ)

நெஞ்சொடு புலத்தல்

குன்றால் விளவெறிந்த கண்ணனுடனெம்மைவிட்டுச்
சென்றாயே நெஞ்சே சிவசிவா—வொன்றாவித்
துன்பத்திற் கியாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சந் துணையல் வழி. (கூ௦)

விக்கிரமன் மற்றொருத்தி வேட்கையுற் றாங் தேடிநொந்தாள்
தொக்க வுருப்பசியின் சோமேசா—ஒக்கும்
அவர்நெஞ் சவர்க்காதல் கண்டு மெவ்னெஞ்சே!
நீயெமக் காகா தது. (கூ௦)

புலவி

சத்திய பாமைமலர் தந்திலனென் றாடவுடன்
சித்த மகிழ்வித்தான் சிவசிவா—நித்தமுணற்
குப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது
மிக்கற்றா னீள விடல். (கூக)

நொண்ட பரவை கொடும்புலவி யெல்லாம்வன்
றொண்டர்க்குப் பேரழகே சோமேசா—தண்டா
நலந்தகை நல்லவர்க் கேளர் புலத்தகை
பூவன்ன கண்ணா ரகத்து. (கூக)

புலவி நுணுக்கம்

இப்பிறப்பி லேபிரியே னென்றநளா ஞேடேல்
செப்பவரி தன்றே சிவசிவா—அப்படியே
இம்மைப் பிறப்பிற் பிரியலமென் றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள். (கூஉ)

சீவகன் மஞ்சரியைத் தாழ்த்துரைப்பச் சீறினளே
தூவாய்க் குணமாலை சோமேசா—வாவகையே
தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குநீர்
நிக்கீர ராகுதி ரென்று. (கூஉ)

ஊடலுவகை

மான்மகள் பாலூடி மரமானுன் மழகளிற்றின்
றேனனையாள் காந்தன் சிவசிவா—வேனெனிலங்
கூடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின். (௧௫௫)

காயும் புலவியில் வன்றொண்டர் கடைப்பட்டுத்
தோயுமின்பின் மேலானா சோமேசா—ஆயுங்கால்
ஊடலிற் றோற்றவர் வென்றாரது மன்னுங
கூடலிற் காணப் படும். (௧௫௬)

சிவசிவ வெண்பாவும்,
சோமேசர் முதுமொழி வெண்பாவும்
முற்றுப்பெற்றன.

ஆயிரத் தறுநூற் றெண்பது பத்தா
மாண்டுசெல் சகாப்தநா ளதனில்
மாயிரு ஞாலத் ததிகமாந் தில்லை
மன்றில்வாழ் சென்னமல் லையர்
பாயிரு டோக்கும் பரிதிபோற் பாவப்
படாகற் றிடுஞ்சிவ வெண்பாத்
தீயவை போக்கிப் பரகதி சேரச்
செப்பினன் றெளிதவத் தவர்க்கே.

உ

கணபதி துணை

சிவசிவ வெண்பா,
சோமேசர் முதுமொழி வெண்பாக்களுக்கு
செய்யுள் முதற்குறிப் பகராதி

செய்யுள்	பக்கம்
அ	
அச்சுவத்தமா	34
அட்டொரனாணிட்	11
அத்தன்பத	18
அததிரவாக்	2
அப்பூதியார்	25
அல்லமனை	42
அறியவசமோ	17
அற்காவமண்	17
அன்பரைக்கண்	7
அன்பன்றுறப்ப	43
அன்றமணர்	16
அன்றரசோ	25
அன்றுதமருள்ள	19
அன்றுமகப்பெறு	10
அன்றுவனததண்	43
அன்றெருவை	34
அன்னமிடான்	4
ஆ	
ஆக்கையுமாயிர	13
ஆங்காரியங்	29
ஆடம்பரிசேவ	10
ஆயிரத்தறுநூற்	46
ஆர்ந்தசுரரானு	38
ஆர்வீடணனே	19
ஆன்றவெழிற்	6
இ	
இந்துநுதன்	40
இப்பிறப்பிலே	45
இப்புவிமேற்	19
இல்வாழ்தரும	3
இரணியன்	22
இல்லாண்மறுப்ப	30
இல்லாளைப்பற்றி	28
இல்வலன்வாதாவி	11
இறைமுருகன்	6
இன்சொலிராம	5
இன்பமுற்றான்	40
ஈ	
ஈரைந்தலையா	16
ஈன்றான்	39
உ	
உக்கிரனார்	27
உரமிறந்து	27
உற்றகுசேல	28
உற்றாளைப்பெட்ட	14
உன்பணிக்கென்	35
ஊ	
ஊனுக்கூடெனன்	15
எ	
எங்குமிறவா	13
எண்ணெயிரப்	37
எததிறத்துங்	30
எததிறமு	16
எய்தருமம்பா	3
எய்தாதிராமற்	22
எய்துசவுபரி	3
எய்துமுருவறி	24
எல்லாமறையவர்	35
எல்லாமுணர்	6
என்றுமொரு	22
என்றும்பதினு	23
ஏ	
ஏர்மணநல்லூர்	10
ஏற்றதுரோண	37
ஏனையர்பால்	30

செய்யுள்	பக்கம்
ஐ	
ஐங்காரனென்	30
ஐங்கரனை	31
ஐவரில்லாளழுத	20
ஐவரின்று	7
ஒ	
ஒட்டலன்செய்	7
ஒன்றுதவவேட	37
ஓ	
ஓடிவருபுட்	9
ஓதாநாளோதுகலை	43
ஓதுகனிபொரு	32
ஓர்சங்கத்தார்	25
ஓர்நாளகலியை	40
க	
கஞ்சாறர்	37
கற்பின்மை	32
கன்றுல்விளவெறி	45
கா	
காங்கேயன்	38
காட்டுமுயலு	18
காதற்குணம	39
காததானசல	26
காமமிகவுழந்து	39
காயும்புலவியில்	46
காரிகையாரை	13
கால்சேய்கதிர்	23
கானடந்து	39
கு	
குந்திமகார்	8
குறித்தரசு	28
குற்றொருவர்	8
குன்றிற்சுமதி	44
குன்றெடுத்தா	5
கூ	
கூற்றுவர்	22
கூனியிராமன்	8
கே	
கேழ்வரை	41
கொ	
கொண்டபரவை	45
கொண்டான்	27
கொன்படைக	31
கோ	
கோதைவரிவிற்	40
கோவணமொன்	13
கோற்றொடிவிற்	43
ச	
சக்கரத்தை	17
சங்கிலிபாலாரூர	44
சதமுகனை	19
சத்தியந்தப்பாம	3
சத்தியபாமை	45
சந்தனுவுங்	42
சந்திரசேனன்	44
சம்பந்தர்	15
சனகனுலகநெறி	16
சா	
சாரங்கமீது	14
சாரும்பதியில	35
சானகியை	17
"	24
சி	
சிவசிவாவெண்பா	1
சீ	
சீர்கொளிறை	2
சீவகன்மஞ்சரி	45
சு	
சுக்கிரனுர்சாப	32
செ	
செவ்வேளை	24
சே	
சேக்கிழார்	8
சேரவிரைந்து	39
சொ	
சொற்சுவைசேர்	13
த	
தக்கனுர்வேள்வி	3
தக்கனுனையெள்ளி	23
தக்கன்பான்	32
தண்டியடிகளிரு	34
தந்தைக்கிளமை	9
தந்தையுள	22
தந்தைவதுவை	33
தருமகுண	37
தன்மகனுன்	16
தன்மதுரை	6
தன்றலைமேற்	29
தன்றுயர	24
தன்னையே	42
தா	
தாதைசிறை	20
தாதையன்றி	41

செய்யுள்	பக்கம்
தாயடிமை	30
தாயைத்தடிக	9
தாய்கருவில்	14
தாய்நீண்ட	29
தாய்போல்	29
தாருவனமுனிவர்	34
தாவுசினத்தாற்	12
தீ	
தீயனவே	6
தூ	
தூய்யபகீரத	36
தூருவதன்	28
தெ	
தென்னுலக	1
தே	
தேசிகனைக்கொண்	19
தேருமா	18
தோ	
தோன்றுவகை	4
ந	
நங்கையுமை	5
நந்திகலம்பக	31
நந்துசசிமுகத்	39
நல்லசுகருக்	2
நல்லதிலகவதி	33
நல்லதினமென்	21
நல்லூழிநான்கு	34
நல்விசயன்	35
நற்றருமன்	36
நா	
நாடரியகண்ணே	41
நாய்வாற்களவினை	11
நி	
நித்தியத்துவங்	23
நித்திரையினூற்ற	42
நின்னபிடேக	7
நீ	
நீசவுருவ	17
நீநகைப்ப	27
நே	
நேயபுகழ்	2
ப	
பண்டைவினை	9
பத்ரகிரிமாதர்	13
பல்லவர்கோன்	12
பன்முனிவர்	41
பன்மறையோர்	17
பன்னுமசதி	5
பா	
பாடினர்	4
பாந்தட்பகை	35
பாரமுடிபத்தும்	8
பார்க்கவன்பாற்	15
பார்சீதைமூலம்	14
பார்த்தன்சுபத்தி	38
பார்த்திவனே	27
பி	
பிள்ளையார்	12
பிள்ளையுடனுண்	11
பு	
புண்ணேடியிர்	35
புத்தர்மிகவாது	15
புறம்பியத்து	12
புன்புலா	10
பூ	
பூடணம்போல்	5
பூமலர்கொ	2
பெ	
பெற்றவைக்கென்	14
பை	
பைங்தொடியு	38
பொ	
பொங்குபுகழ்	11
பொன்மலையின்	22
பொன்மானென்	29
பொன்னனையா	4
பொன்னியென	26
போ	
போசனுரை	32
போசன்கவினு	9
போயவரசாளி	23
போற்றுஞ்	28
ம	
மங்கலியம்	33
மங்காதமங்கு	20
மங்கைமுலை	24
மச்சஞ்சுமந்	10
மதுவளரும்	1
மறலிசெயன்	4
மற்றிருதாட்டிர	36
மன்றிற்பரசமய	25
மன்மதனின்	27
மன்னவையிற்	8

செய்யுள்	பக்கம்
மன்னனகலியை	44
மன்னுமுன்கே	44
மா	
மாதவருண்	33
மாமணியாற்	36
மாமறுனென்னு	25
மாயனவவே	11
மாரன்மகன்	41
மாலான்முதலிகழ்	22
மாறனொருநாட்	40
மாற்குமதுவும்	30
மாற்றார்முடியும்	31
மான்மகள்	46
மீ	
மீனென்றுரை	9
மு	
முத்தமிழ்ச்சங்க	26
முப்புரத்தை	21
முப்புரத்தோர்	19
முல்லைமடவார்	41
முற்பணயத்	33
முன்னரமண்	14
மூ	
மூர்த்திபால்	10
மூவர்தடுப்ப	3
மெ	
மெய்த்தவத்தை	38
மெய்த்ததிரு	15
மே	
மேருவுட	7
மேலவளமெல்	26
மேவும்வனசா	12
மை	
மைந்தனொரு	20
மைந்தன்முடி	23
யோ	
யோகிருந்தகால	18
யோசனைகந்தி	41
வ	
வண்ணமகளுவ	20
வண்ணவுருக்கு	43
வந்தசுகசாரர்	21
வந்தமுனிவோரை	31
வயத்திரத	18
வரமிழந்தான்	6
வல்லதிகன்	26
வள்ளிபுனங்	36
வன்சமணர்	29
வன்மைச்சுயோத	34
வன்றொண்டர்	16
வா	
வாக்கரசர்	28
வாசவனோராசை	7
வாடிககணவ	42
வாய்ந்ததமயந்தி	38
வாரிவழிதாரா	37
வாழ்வாதவூரர்	26
வாழ்விழந்த	40
வானவர்கோன்	42
வி	
விக்கிரமன்	45
விற்பிரம்பா	2
வீ	
வீமனைமுன்	18
வெ	
வெங்கரியை	21
வெய்துரையா	20
வெய்யமரப்பே	15
வெள்ளிவெற்பை	21
வெற்றிநளன்	33
வென்றிபுனை	31
வென்றியிராம	25
வே	
வேண்டுமுருப்பசி	32
வேதனில்லாள்	21
வேதியனுளாமோ	5
வேந்துமகற்	12
வேந்துரையாற்	4
வேள்வித்தொழிற்	36
வை	
வைதாள்விசயன்	43

செய்யுள் முதற்குறிப்பகராதி முற்றிற்று

முருகேசர் முதுநெறி வெண்பா.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

முருகேசர் முதுநெறி வெண்பா

காப்பு

கதிநெறியார் நெஞ்சிற் கதிர்க்குமுரு கேசர்
முதுநெறிவெண் பாவை மொழியப் — பதிநடம்வேட்
டறபகத்தர் மல்குதில்லை யம்பலமேல் பாற்சிகரிக்
கற்பகத்தின் பொற்பதமே காப்பு.

அவையடக்கம்

தேசமலி தெய்வத் திருக்குறள்க ளோர்முரு
கேசனென நாமங் கெழுமுதலி — னேசகன்றோர்
குற்றமது நோக்காரென் கொள்கையினு ளீதுசில
சொற்றனனோர் நூலாத் தொகுத்து.

நூல்

க. அறத்துப்பால்

கடவுள் வாழ்த்து

தேவரையுஞ் சூரனையுந் தேற்றுருவாற் றேர்ந்தனன்றீ
மூவரிறை யென்ன முருகேசா — வோவில்
அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. (க)

வான் சிறப்பு

அன்பரிடர் கண்டரன்பா லப்பருஞ்சம் பந்தரொடு
முன்பொருகா சேற்றார் முருகேசா—இன்புதரும்
தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின். (௨)

நீத்தார் பெருமை

ஈண்டுதச தோற்றமா மேய்ந்தான பிருகுரையான்
மூண்டாற்பூ சித்தாம் முருகேசா—பூண்ட
நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். (௩)

அறன்வலியுறுத்தல்

அற்றமின்றிச் சாமந்தன் கோனிதியா லண்ணல்பணி
முற்றுவித்தின் புற்றான் முருகேசா—மற்றதனால்
ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல். (௪)

இல்வாழ்க்கை

மெய்த்தமிழ்வே தத்துலகுய வித்துயர்ந்தார் வள்ளுவனார்
முத்தவில்வாழ் வுற்று முருகேசா—உத்தமமாம்
ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து. (௫)

வாழ்க்கைத்துணைநலம்

கோதில் சுதரிசனன் சொற்றிறம்பாக் கோதையொடு
மூதனுர்தீர்ந் துய்ந்தான் முருகேசா—பேதமிலாப்
பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின். (௬)

புதல்வரைப் பெறுதல்

துற்றநர குற்றோர் சசிவன்னன் சூழ்வெகுநியான்
முற்றினர்சொர்க காதி முருகேசா—வுற்றுப்
பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற. (௭)

அன்புடைமை

கின்னரரோ டேமேதா சேதனைமீட் டாவசவர்
முன்னரன்பாற் சென்று முருகேசா—மன்னுலகில்
அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க
கென்போ டியைந்த தொடர்பு. (௮)

விருந்தோம்பல்

துன்னுவனத் தூர்தருமன் சூழ்முனிவர்ப் பேணுதலான்
முன்னுவளம் பெற்றான் முருகேசா—உன்னின
வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று. (௯)

இனியவை கூறல்

அண்டமுதல் வற்புறுத்தே யைந்தலையு மொன்றிழந்தான்
முண்டகனசெம் மாந்து முருகேசா—மண்டிப்
பணிவுடைய னின்சொல னாத லொருவற்
கணியல்ல மற்றுப் பிற. (௰)

செய்ந்நன்றியறிதல்

மெய்த்தரும தெய்வநன்றி வீட்டிமதி மம்மருற்றான்
முத்தவற்ச நாபன் முருகேசா—இத்தரையில்
எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. (௧௧)

நடுவுநிலைமை

நீதியிற்பாஞ் சாலிகடா விற்குவிடை நேர்விகன்னன்
மூதவையிற் சொற்றான் முருகேசா—காதலினால்
சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா
வுட்கோட்ட மின்மை பெறின். (௧௨)

அடக்கமுடைமை

ஓங்குதருக கம்வாத வூருழைச் செய்தபுதர்
மூங்கையராய்ச் சோர்ந்தார் முருகேசா—ஆங்கதனால்
யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. (௧௩)

ஒழுக்கமுடைமை

வேதநெறி பேணாத் துராசாரன் மிக்கயர்ந்தான்
மோதலகை பற்ற முருகேசா—தீதில்
ஒழுக்கத்தி னொல்கா ருரவோ ரிழுக்கத்தி
னேதம் படுபாக் கறிந்து. (௧௪)

பிறனில்விழையாமை

பார்க்கவனார் பன்னியத்தம பற்றியவி யாயினன்முன்
மூர்க்கனாம் தண்டன் முருகேசா—வேர்க்கும்
பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண். (௧௫)

பொறையுடைமை

மன்னவனாற் றன்னையொறுப் பித்துமரு வாலசுதன்
முன்னவனைக் காத்தான் முருகேசா—உன்னாளும்
நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை
போற்றி யொழுகப் படும். (௧௬)

அழுக்காறாமை

ஆர்த்தபொரு ளைச்சிசுபா லன்கண்ண னாழியினான்
மூர்த்தமறுப் புண்டான் முருகேசா—கூர்த்த
அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றி
னேதம் படுபாக் கறிந்து. (௧௭)

வெஃகாமை

மாண்டுநக ரோடளறு வாய்ந்தான் பராந்தகக்கோன்
மூண்டரன்பூ வெஃகி முருகேசா—வேண்டும்
நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும். (௧௮)

புறங்கூறாமை

தூஞ்சுமனத் தோடுவணஞ் சூரன்முத லோர்த்தூற்றி
முஞ்சலுற்ற தந்தோ முருகேசா—விஞ்சலுறக்
கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல். (௧௯)

பயனில சொல்லாமை

கற்றும் பயனிலசொல் கன்னனுரைத் தெஞ்ஞான்று
முற்றுபழி பூண்டான் முருகேசா—உற்றுணரிற்
பல்லார் முனியப் பயனில சொல்லுவா
னெல்லாரு மெள்ளப் படும். (௨௰)

தீவினையச்சம்

பாவ மொருதான்செய் பற்றலின்வேள் தோடயர்ந்தார்
மூவர் மறையோர் முருகேசா—மேவு
எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும். (௨௧)

ஒப்புரவறிதல்

தொண்டருக்கேற றங்கரும சிலாமு தத்தொருத்தார்
முண்டகனா மால்போற்று முருகேசா—பண்டுமே
இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர். (உஉ)

ஈகை

பொன்னகர்க்கோ னேற்பத் ததீசி புறவெலும்பை
முன்னலின்றித் தந்தான முருகேசா—மன்னி
இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள. (உங)

புகழ்

பக்சனையோ வாசவர்கா ளின்பமிந்தத் தாய்மனுற்றே
மொய்த்தபுகழ் பூண்டான் முருகேசா—உய்த்துணரின்
ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில. (உச)

அருளுடைமை

வாழ்கனாங்க ளாக்கினஞ்ச தானந்தன் வன்னரகின்
ஆழ்ந்துகொடி யோரை முருகேசா—தாழ்விலா
நல்லாற்றா னாடி யருளாள்க பல்லாற்றாற்
றேரினு மஃதே துணை. (உரு)

புலான்மறுத்தல்

காழுறமூன் றுய்த்தலின்மா யீகனுமார்க் கண்டனுன்
மோழலுருப் பெற்றான் முருகேசா—வீழும்
படைகொண்டார் நெஞ்சம்போ னன்றூக்கா தொன்ற
னுடல்சுவை யுண்டார் மனம். (உசு)

தவம்

பாக்கியிலனாந் தன்புற் பதத்தடைந்தா னந்தநட
முழுதுறவத்தாற் கண்டான் முருகேசா — அறமற
வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும் (உஎ)

கூடாவொழுக்கம்

சந்நியா சம்புனைந்தே சானகியைத் தான்கவர்ந்தான்
முன்னிலங்கை வேந்தன் முருகேசா — நன்றும்
தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று. (உஅ)

கள்ளாமை

நாகயகக் கள்வசிட்ட னற்சுரபி யைப்பற்று
மோகமுற்றுக் கெட்டார் முருகேசா — போதுங்
களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும். (உகூ)

வாய்மை

மாழ்கித் தருமனொரு பொய்யுரைத்தே வன்றுயருந்
அழுந்தியங்கச் சோர்ந்தான் முருகேசா — தாழ்வின்றிப்
பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று. (௩௦)

வெகுளாமை

சித்தரா மன்வெகுளி மூண்டிழந்தான் றீக்கண்ணை
முத்தனைவெல் மன்றான் முருகேசா — நித்த
மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய
பிறத்த லதனான் வரும். (௩௧)

இன்னா செய்யாமை

கன்னிவகை முத்திநா தன்றனையு மெய்ப்பொருளார்
முன்னைநனி காத்தார் முருகேசா—மன்னுலகில்
இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல். (௫௨)

கொல்லாமை

நத்திருடன் தெய்வவுரு தாங்குதயை யாற்பாதர்
மூதகரிணமேம பட்டார் முருகேசா—மெத்த
நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் றலை. (௫௩)

நிலையாமை

துக்கன்மதர்த்த தெச்சமொன்று தான்செய்தயச் சென்னிபெற்ற
மூகக்கணனை யெளனி முருகேசா—வுக்கமின்போல [ன
னில்லாத வற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை. (௫௪)

துறவு

மேக்குவனை யின்பும் வெறுத்துச் சிவிமகவான்
மோகநிலை சாராதான் முருகேசா—வாக்கித்
தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர். (௫௫)

மெய்யுணர்தல்

செம்மைப் பொருளென்னத் தேர்ந்தாரினைக் கும்பமுனி
மும்மைமைற் றயர்ந்தான் முருகேசா—இம்மைதனிற்
கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி. (௫௬)

அவாவறுத்தல்

பற்றறுத்து வாமதேவன் பிறவாப் பான்மைபெற்றான்
முற்றியான் பூசை முருகேசா — கற்றுணர்ந்தோர்
வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும். (௧௭)

ஊழ்

விஞ்சுகங்கைத் தம்பருணி மேவுபரிக் கித்தாவான்
முஞ்சினனையுந் தோற்றான் முருகேசா — எஞ்சலிலா
ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும். (௧௮)

---

௨. பொருட்பால்

இறைமாட்சி

உற்றபுற வம்புரப்பா னேங்குசிபி கண்ணுடலை
முற்றுமரிந் தீந்தான் முருகேசா — பற்றும்
முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும். (௧௯)

கல்வி

மன்னியின்பந் துய்த்தசங்க வாணர்க்கீ ரற்பிரிவை
முன்னிமுன் னிசசோர்ந்தார் முருகேசா — நன்னா
உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். (௨0)

கல்லாமை

கண்டிவச வேசர்முன் னோர்க் கீடழிந்தார் வீண்வாத
மூண்ட மறைநமியார் முருகேசா — வேண்டுவன
கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும். (௨௧)

கேள்வி

அக்கனையி லப்பலியா லர்ச்சுனது றேவர்க்குரையின்
முதறிவெபற்றான சண்டன் முருகேசா—நத்தி
எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும். (௪௨)

அறிவுடைமை

தீதையுன்னி நீங்கினஞ்ச சீலனே புயபலன்பின்
மூதனூர்க்கோட் பட்டான முருகேசா—ஓதில
அறிவுடை யா ராவ தறிவா ரறிவிலா
ரஃதறி கல்லா தவர். (௪௩)

குற்றங்கடிதல்

தெய்வநிதி யாதிகவர் தீமையின்ம ஞேசவன்காண்
மொய்வளநோற் றேயந்தான் முருகேசா—வய்யச
செயற்பால செய்யா திவறியான் செல்வ
முயற்பால தன்றிக் கெடும். (௪௪)

பெரியாரைத் துணைக்கோடல்

நாரதனுற் சமவாத நற்றவற்சேர்ந் தேமருகத்
தூரியின்மேம் பட்டான் முருகேசா—பாரதனில்
உற்றநோய் நீக்கி யுறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல். (௪௫)

சிற்றினஞ் சேராமை

வாக்கரசர் சாவகரான் மாழ்கித் தமக்கையான்
மோக்கநிலை பெற்றார் முருகேசா—பார்க்குங்கால்
நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி
னல்லற் படுப்பதூஉ மில். (௪௬)

தெரிந்து செயல்வகை

பாண்டவர்செல் வங்கவர்வான் பண்டுதுரி யோதனன்றான்
மூண்டிழிந்தான் மாய்ந்தும் முருகேசா—வேண்டுங்கால்
எள்ளாத வெண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு
கொள்ளாத கொள்ளா துலகு. (௪௭)

வலியறிதல்

வாரிசுதை வயவுருவ ணத்தையெதிர் வானவர்கண்
மூரியிழந் தெய்த்தார் முருகேசா—தேரின்
உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர். (௪௮)

காலமறிதல்

சிந்துபதி யைத்தங்கை யோடிறத்தான் செவ்வியுற
முந்திவிச யன்றான் முருகேசா—நந்தலின்றி
எய்தற் கரிய தியைந்தக்கா லந்நிலையே
செய்தற் கரிய செயல். (௪௯)

இடனறிதல்

சென்னியனீ கத்தைமோ திச்சிதைத்த தோர்கோழி
முன்னுறையூர்க் கானின் முருகேசா—மன்னுலகில்
அஞ்சாமை யல்லாற் றுணைவேண்டா வெஞ்சாமை
யெண்ணி யிடத்தாற் செயின். (௫௦)

தெரிந்து தெளிதல்

தீதெனுமி ராக்கதனைத் தேர்மீத் திரசகன்றான்
மேதாக்க னென் முருகேசா—ஆதலினுஞ்
தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா விடும்பை தரும். (௫௧)

தெரிந்து வினையாடல்

காண்டலின்றிச் சச்சந்தன் கட்டியங்கா ரற்கரசை
ஈண்டளித்து மாண்டான் முருகேசா—வேண்டி
எனைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகு மாந்தர் பலர். (௫௨)

சுற்றந்தழால்

எய்த்து மகத்திறந்துஞ் சூர னிளையோரான்
மொய்த்தவளம் பெற்றான் முருகேசா—மெய்த்த
விருப்பறாச் சுற்ற மியையி னருப்பறா
வாக்கம் பலவுந் தரும். (௫௩)

பொச்சாவாமை

கோடியர்தன் போரறேன்றக் குன்றிமதர்க் கும்பமுனி
மூடுவெண்ணே யுற்றான் முருகேசா—நாடுங்கால்
முன்னுறக் காவா திழுக்கியான் றன்பிழை
பின்னூ றிரங்கி விடும். (௫௪)

செங்கோன்மை

மைந்தனுய்ந்தான் வற்சமமைச் சோடுமநு நீதிகண்டோன்
முந்தைமுறை தன்றேன் முருகேசா—வுந்தும்
இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கு முட்டாச் செயின். (௫௫)

கொடுங்கோன்மை

வேர்த்திடுக்கண் செய்து விளிந்தான் கருநாடன்
மூர்த்தியான் மேனான் முருகேசா—கூர்த்துணரின்
மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேன்
மன்னாவா மன்னர்க் கொளி. (௫௬)

வெருவந்த செய்யாமை

காத்தகபி லற்கிடும்பை செய்து கணைமுரிந்தான்
மூத்தோன் மழுவான் முருகேசா — வேதநூல்
இறைகடிய னென்றுரைக்கு மின்னாச்சொல் வேந்த
னுறைகடுகி யொல்லைக் கெடும். (௫௭)

கண்ணோட்டம்

ஒவியுழ வன்வேண்ட வுக்கிரனு மிந்திரன்கொண்
மூவைவிடு வித்தார் முருகேசா - தாவிலாக்
கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலா
ருண்மை நிலக்குப் பொறை. (௫௮)

ஒற்றாடல்

பின்னைகரம் வீடியபின் பேதுற்றான் சூரனொற்றை
முன்னினிதா ளாமன் முருகேசா — அன்னதனால்
ஒற்றினா லொற்றிப் பொருடெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில். (௫௯)

ஊக்கமுடைமை

நான்கனொடு கோளியக்கு நற்பதவி யைத்துருவன்
மூள்கருத்தாற் பெற்றான் முருகேசா — நீள்பெருக்கின்
வெள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர்தம்
முள்ளத் தனைய துயர்வு. (௬௦)

மடியின்மை

அம்புவிமுற் றும்புரந்தா னண்மைரகு மாற்றலரை
மொய்ம்பதனால் வென்றே முருகேசா — விம்பர்
மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
றாஅய தெல்லா மொருங்கு. (௬௧)

ஆள்வினையுடைமை

ஆள்வினை யான்மிக்க தலமாற்றிச் சுவேதமன்னன்
மூள்வினை யற்றுய்ந்தான் முருகேசா—கோளாவினையாம்
ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர். (சுஉ)

இடுக்கணழியாமை

செற்றச் சுயோதனன்செய் தீங்கையின்பிற் றேர்தருமன்
முற்றுமின்பந் துய்த்தான் முருகேசா—பற்றிவரும்
இன்னாமை யின்ப மெனக்கொளி னாகுந்தன்
னொன்னார் விழையுஞ் சிறப்பு. (சுங)

அமைச்சு

சேக்கிழார் சென்னிகருத் தொண்டர் சிறப்புணர்த்தி
மோக்கநெறி தந்தார் முருகேசா—ஆக்கி
அறிகொன் றறியா னெனினு முறுதி
யுழையிருந்தான் கூறல் கடன். (சுச)

சொல்வன்மை

வாதவூ ராளிசெண்டால் வாங்கலின்றோ வண்மையெனு
மோதயிறைக் கீந்தார் முருகேசா—தீதிலதாச்
சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து. (சுரு)

வினைத்தூய்மை

வேள்வியிற்கோ வூனுகர்ந்தும் வேடரிற்றாழ்ந் தேழ்மறையோர்
மூள்வினை முற்றார் முருகேசா—நீள்விண்
இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சியவர். (சுசு)

வினைத்திட்பம்

வீவசன் சீறிருந்தே தெவ்வையழித் தான்முடிவின்
மேவுவரும் போற்று முருகேசா — யாவும்
கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை யிடைக்கொட்கி
னெற்றா விழுமந் தரும். (௬௭)

வினைசெயல்வகை

யாண்டுளனோ ராயனெனென் றேற்றிரவி யனைமகன்பான்
மூண்டுசென் மாண்டான் முருகேசா — வேண்டின்
முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும
படுபயனும் பார்த்துச் செயல். (௬௮)

தூது

சூரனெதிர் தக்கவுரை சொற்றிறமாந் தூற்றகன்றான்
மேரிமிகும வாகு முருகேசா — ஓரின்
விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன். (௬௯)

மன்னரைச்சேர்ந்தொழுகல்

மன்னனயி ராவுமெல்ல மல்குவித்தார் சைவநெறி
முன்னுவச வேசர் முருகேசா — இன்னதனால்
போற்றி னரியவை போற்றல் கடுத்தபின்
றேற்றுதல் யார்க்கு மரிது. (௭௦)

குறிப்பறிதல்

இந்தனக்கே லாமரமென் றன்றருமன் வீமனெண்ணை
முந்தவையிற் றேர்ந்தே முருகேசா — மைந்தருள்ளூழ்
ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல். (௭௧)

அவையறிதல்

சொற்றவிடைக் காடர்கவி தோற்றதுதென் னன்சபையின்
முற்றுசுவை யுற்றும் முருகேசா—உற்றறுசா
அங்கணத்து ளுக்க வமிழ்தற்றாற் றங்கணத்
தரல்லார்முற் கோட்டி கொளல். (எஉ)

அவையஞ்சாமை

தாதையைவெல் வங்கிமுனி தன்னையட்ட வக்கிரன்றான்
மூதுணர்வால் வென்றான் முருகேசா—மேதமிலா
ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு. (எங)

நாடு

எச்சிறப்பேயுந் தென்னிலங்கை வீந்ததரா சினத்தான்
மூச்சகமு மேத்து முருகேசா—மெச்சவே
ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு. (எச)

அரண்

நம்மரனார் செய்புன் னகையில்வெந்த வேயசுரர்
மும்மதிலு மேனுண் முருகேசா—அம்ம
எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
யில்லார்க ணில்ல தரண். (எரு)

பொருள் செயல்வகை

மன்னுகிழி பெற்றகுல பூடணனேன் மல்கினவே
முன்னுமற மெல்லா முருகேசா—துன்னியதோர்
குன்றேறி யானைப்போர் கண்டற்றாற் றன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை. (எசு)

படைமாட்சி

பற்றுநிரை மீட்டெதிர்த்த பார்த்தனாற் புண்பட்டார்
முற்றினவர் யாரும் முருகேசா—சுற்றி
ஒலித்தக்கா லென்னு முவரி யெலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும். (எஎ)

படைச்செருக்கு

மாலுறுத்தி வீமன்பான் மாண்டனனே தற்கபாதார்
மோலிபுனை மன்னர் முருகேசா—சாலப்
புரந்தார்கண் ணீர்மல்கச் சாகற்பிற் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து. (எஅ)

நட்பு

மேவ விதுர னொடு விண்ணிழந்தும் மண்ணடைந்தார்
மூவரகல் வஞ்சி முருகேசா—தாவில்
அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்க
ணல்ல லுழப்பதா நட்பு. (எகூ)

நட்பாராய்தல்

வஞ்சகவா னைந்தனட்பாற் சூரியசன் மாவானா
முஞ்சமிடர் பெற்றான் முருகேசா—நெஞ்சதனில்
ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும். (அ0)

பழைமை

நம்பனமர்க் கேன்றவா னாற்புரந்தான் றொன்மையுன்னி
மொய்ம்புதொலை யாமன் முருகேசா—அம்புவியில்
பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின். (அக)

தீநட்பு

இன்னலே பல்குநம்பா லென்று விபீடணன்றன்
முன்னவனை நீத்தான் முருகேசா—துன்னிப்
பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்ற லினிது. (௮௨)

கூடாநட்பு

நேசன்போற் காடுவெட்டி நேரியன்றென் னற்றழுவி
மோசமே செய்தான் முருகேசா—மாசின்
மனத்தி னமையா தவரை யெனைத்தொன் றுஞ்
சொல்லினாற் றேறற்பாற் றன்று. (௮௩)

பேதைமை

வேதசன்மா பல்கலையின் மிக்குமுனி வர்ப்பழிப்பான்
மூதாக்க னானான் முருகேசா—காதலினால்
ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில். (௮௪)

புல்லறிவாண்மை

ஊகையினால் வேதா வுரையையுமெள் ளிச்சுதன்மன்
மூகையனாய்ச் சோர்ந்தான் முருகேசா—வாகை
அருமறை சோரு மறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு. (௮௫)

இகல்

ஆதியையும் வெல்வான் சலந்தரன்சென் றூழியெங்க
மோதமுடி வுற்றான் முருகேசா—ஓதில்
இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலுங் கெடலு நணித்து. (௮௬)

பகைமாட்சி

நந்தியெதிர் செம்மாந்தே நாகாரி யெஞ்சலிலா
முந்தைவலி தோற்றான் முருகேசா—உந்தும்
வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா
மெலியார்மேன் மேக பகை. (௮௭)

பகைத்திறந்தெரிதல்

ஆர்த்தொரன்பர் புத்தநந்தி யைச்செகுத்தார் சம்பந்த
மூர்த்திதிரு வாககான் முருகேசா—சீர்த்திமிகு
வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை. (௮௮)

உட்பகை

சத்திமுத னூற்றுவர்மாய்ந் தார்விசுவா மித்திரனுண்
மொய்த்தபகை யாலே முருகேசா—வைதத
அரம்பொருத பொன்போலத் தேயு முரம்பொரு
துட்பகை யுற்ற குடி. (௮௯)

பெரியாரைப் பிழையாமை

தேற்றியுதங் கற்கமிழ்ந்தீ யாதுவஞ்சித் திந்திரன்சீர்
முற்றுமிழந் தெய்த்தான் முருகேசா—உற்றுணரின்
ஏந்திய கொள்கையார் சீறி னிடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும். (௯௦)

பெண்வழிச்சேறல்

தாசரதி யுஞ்சீதை தன்வழிப்பட் டோர்மானான்
மோசம்போய்ச் சோர்ந்தான் முருகேசா—பேசுங்கால்
எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை யில். (௯௧)

வரைவின்மகளிர்

மாழ்கிவரை வின்மகளிர் வஞ்சனையிற் பாட்களன்றான்
மூழ்கியல்லாப் புற்றான் முருகேசா—வீழ்கும்
பொருட்பொருளார் புன்னலந் தோயா ரருட்பொரு
ளாயு மறிவி னவர். (கஉ)

கள்ளுண்ணாமை

தூயபல பத்திரன்றான் சூதனைமாய்த தல்லலுற்றான்
மூயமது மாலான் முருகேசா—ஆயுங்கால்
துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்று
நஞ்சுண்பார் கள்ளுண் பவர். (கங)

சூது

வெஞ்சூதாற் றந்தை வெறுக்கக் குணநிதிதான்
முஞ்சினனூண் வவ்வி முருகேசா—துஞ்சும்
அகடாரா ரல்ல லுழப்பர்சூ தென்று
முகடியான் மூடப்பட் டார். (கச)

மருந்து

சீலமிலாப் பேய்ச்சமணர் சிந்தைநைந்தார் பாண்டியனோய்
மூலமறி யாது முருகேசா—ஏலவே
நோய்நாடி நோய்முத னாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். (கரு)

குடிமை

நித்திரையோர்க் கொன்றவசு வத்தாம னீக்கமுற்றான்
முத்தமுனி வோரான் முருகேசா—மெய்த்த
குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போ லுயர்ந்து. (கசு)

மானம்

நேசுருவா னின்னிலைமை தேர்ந்துமா னத்திறந்தான்
மூசுபுகழ்ச் சூரன் முருகேசா—நேசமிகுஞ்
சீரினுஞ் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர். (கள)

பெருமை

தும்பமுனி யானைகுடன் சர்ப்பமென்றே குண்டலியாய்
மொய்ம்பிழந்து வீழ்ந்தான் முருகேசா—உம்பரினும்
மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங்
கீழல்லர் கீழல் லவர். (கஅ)

சான்றாண்மை

தோக்கிடும்பை கௌசிகனாற் சூழ்ந்துமரிச் சந்திரன்சொன்
முக்கியமாக் காத்தான் முருகேசா—அக்கணமே
ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படு வார். (கக)

பண்புடைமை

ஓவாச் சிவசமய மோங்கியதே நால்வரான்
மூவா முதலே முருகேசா—தாவாத
பண்புடையார்ப் பட்டுண் டுலக மதுவின்றேன்
மண்புக்கு மாய்வது மன். (க00)

நன்றியில்செல்வம்

மாழ்கினிதி நல்காநால் வாணிகர்மாண் டார்கடலுண்
மூழ்கினிதி யோடு முருகேசா—வாழ்வுமிக
ஈட்ட மிவறி யிசைவேண்டா வாடவர்
தோற்ற நிலக்குப் பொறை. (க0க)

நாணுடைமை

அந்தணர்க்கீந் தில்லினைநா ணத்தனன்பூழ் கத்துணிந்தான்
முந்துபத்தி ராயு முருகேசா—நந்தலிலா
நாண்வேலி கொள்ளாது மனனேறு வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர். (௧௦௨)

குடிசெயல்வகை

சத்துருவை மாய்த்தான் பராசரன்றன் சந்ததியை
முத்திபதத் துய்த்தே முருகேசா—மெதகில்
கருமஞ் செயவொருவன் கைதூவே னென்னும்
பெருமையிற் பீடுடைய தில். (௧௦௩)

உழவு

இன்னலொற்கத் தும்முழவை யேற்றலினீ சற்கமுது
முன்னமைத்தார் மாறா முருகேசா—உன்னில்
இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர் (௧௦௪)

நல்குரவு

ஆலவா யண்ணலெற்றுழும் பைத்தருமி நீங்கவொற்க
மூலமாத் தோய்ந்தான் முருகேசா—ஞாலமிசை
இன்மை யெனவொரு பாவி மறுமையு
மிம்மையு மின்றி வரும். (௧௦௫)

இரவு

ஒக்கலைவீட் டிக்களத்தை யோகையினி யற்பகையார்
முக்கணனுக் கீந்தார் முருகேசா—மிகுவரும்
இன்ப மொருவற் கிரத்த லிரந்தவை
துன்ப முறாஅ வரின். (௧௦௬)

இரவச்சம்

துன்பகல்வோ மென்று துருபதன்பா லேற்றபர்த்தான்
முன்பு துரோணன் முருகேசா—வின்பமிக
இன்மை யிடும்பை யிரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில. (௧0௭)

கயமை

அஞ்சகலன் வாமதேவற் குதவான் வாசியைச்சேய்
முஞ்சியபின் னீந்தான் முருகேசா—அஞ்சலின்றிச்
சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ். (௧0௮)

---

௩. காமத்துப்பால்

தகையணங்குறுத்தல்

ஓகையினா ருக்குமணி யொண்மைகண்டு சூர்கொலெனு
மோகமிக்கான் கண்ணன் முருகேசா—வாகின்
அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொன் மாலுமென் னெஞ்சு. (௧0௯)

குறிப்பறிதல்

ஊற்றபிணி யும்மருந்துங் காசிபனோர்ந் தான்மாயை
முற்றுழிகண் ணோக்கின் முருகேசா—பற்றும
இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து. (௧௧0)

புணர்ச்சி மகிழ்தல்

பூரிளமை யேற்றுவெறுப் போகநனி துய்த்துவந்தான்
மூரி யயாதி முருகேசா—ஓரின்
அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு. (௧௧௧)

நலம்புனைந்துரைத்தல்

சந்தமிகு வாலைநலத் தைச்சதவா லன்வியந்து
முந்திமண நேர்ந்தான் முருகேசா—கந்த
முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு (ககஉ)

காதற் சிறப்புரைத்தல்

தேர்ச்சியய னிந்துமதிச் சேர்ந்தழிவாழ்ந் தேமடிவின்
மூர்ச்சித்து மாய்ந்தான் முருகேசா—நேர்ச்சிமிக
வாழ்த லுயிர்க்கன்ன ளாயிழை சாத
லதற்கன்ன ணீங்கு மிடத்து. (ககங)

நாணுத்துறவுரைத்தல்

கோவொடுநா ணீத்தகலி கைக்கயர்ந்தான் கோமகவான்
மூனுறுகா மத்தான் முருகேசா—வானுறுமக்
காமக கடும்புன லுய்க்குமே நாணொடு
நல்லாண்மை யென்னும் புணை. (ககச)

அலரறிவுறுத்தல்

மேயருக்கு மாங்கதனை வெஃகியொரு நாண்முகுந்தை
மூயபழி பூண்டான் முருகேசா—நேயமிகக்
கண்டது மன்னு மொருநா ளலர்மன்னுந்
திங்களைப் பாம்புகொண் டற்று. (கக௫)

பிரிவாற்றாமை

அற்றதுணை யோடுதம யந்திபுன லார்ந்துநளன்
முற்றழியுஞ் சோர்ந்தான் முருகேசா—பற்றி
அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொற்
றேறியார்க் குண்டோ தவறு. (ககசு)

படர்மெலிந்திரங்கல்

ஆகமெலிந் தாள்சீதை வான்மீகி யாதரித்து
மோகமொடு நாணான் முருகேசா—மேவகமிகும்
காமமு நாணு முயிர்காவாத் தூங்குமென்
னோனா வுடம்பி னகத்து. (கக௭)

கலைவிருப்பழிதல்

ஒல்லையிற்கண் ணன்வருங்கொ லென்றபார்த்தா ருத்தவன்பால்
முல்லைமட மாதர் முருகேசா—புல்லலுறப்
பேணாது பெட்டா ருளர்மன்னோ மற்றவர்க்
காணா தமைவில கண். (கக௮)

பசப்புறுபருவரல்

சீவகனீங் கப்பசந்து சேடிழந்தெய்த் தாள்பதுமை
மூவலிலா தோங்கு முருகேசா—ஓவலிலாச்
சாயலு நாணு மவர்கொண்டார் கைம்மாறா
நோயும் பசலையுந் தந்து. (கக௯)

தனிப்படர்மிகுதி

பற்றி னுருப்பசியைப் பார்த்தன் வெஃகான் சிற்சபையின்
முற்றம்ப மேவு முருகேசா—உற்ற
ஒருதலையா னின்னாது காமங்காப் போல
விருதலை யானு மினிது. (க௨௦)

நினைந்தவர்புலம்பல்

சித்தமுள வல்லமன்சிந் திப்பனோ வென்றுலைந்தாண்
முத்தநகை மாயை முருகேசா—மத்தமுறும்
யாமு முளேங்கொ லவர்நெஞ்சத் தெந்நெஞ்சத்
தோஒ வுளரோ யவர். (க௨க)

கனவுநிலையுரைத்தல்

காதலனை நாளுங் கனவணைந்தே ஈரதைதான்
மூதுவகை யுற்றாள் முருகேசா—நீநின்
நனவெனவொன் றில்லை யாயிற் கனவின்றேற்
காதலர் நீங்கலர் மன். (௧௨௨)

பொழுதுகண்டிரங்கல்

அந்திப் பொழுதின்மணிச் சூடணினை வாலயர்ந்தாண்
முந்துமணி வல்லி முருகேசா—சிந்தைசெயிற்
காதல ரில்வழி மாலை கொலைக்களத்
தேதிலர் போல வரும். (௧௨௩)

உறுப்புநலனழிதல்

துன்பமுற்றார் தாருவனத் தோகையரெம் மானைவெஃகி
மூன்புவளை தோற்றே முருகேசா—வன்பிற்
பணைநீங்கிப் பைந்தொடி சோருந துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள். (௧௨௪)

நெஞ்சொடு கிளத்தல்

மெய்த்தவ வீடுமனை வேண்டியலைந் தேவெறுத்தாண்
மொய்த்தகுழ லம்மை முருகேசா—உய்த்துணரிற்
காத லவரில ராகநீ நோவது
பேதைமை வாழியென் னெஞ்சு. (௧௨௫)

நிறையழிதல்

போகமுவர்த் தேதவன்வின் போதல்கண்டுங் கௌசிகிபின்
மோகமிகச் சென்றாள் முருகேசா—வாகையினேற்
செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோ
யுற்றா ரறிவதொன் றன்று. (௧௨௬)

அவர்வயின்விதும்பல்

காதலனெந் நாள்வருங்கொ லென்றுதத்தை கவலைமிக்காண்
மூதுணர்வாற் றேர்ந்தோம் முருகேசா — தீதின்
ஒருநா ளெழுநாள்போற் செல்லுஞ்சேட் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு. (கஉஎ)

குறிப்பறிவுறுத்தல்

நங்கைக் குணர்த்தித் தவன்குறிப்பைக் காந்திமதி
முந்தியுடன் சென்றாண் முருகேசா — வங்கில்
பெரிதாற்றிப் பெட்பக் கலத்த லரிதாற்றி
யன்பின்மை சூழ்வ துடைத்து. (கஉஅ)

புணர்ச்சிவிதும்பல்

செற்ற மிகுபரவை வன்றொண்டா சென்றவழி
முற்றவளைக் காணாண் முருகேசா — வற்றவரைக்
காணுங்காற் காணேன் றவறாய காணாக்கால்
காணேன் றவறல் லவை. (கஉகூ)

நெஞ்சொடு புலத்தல்

பேவாக் கணவனைமுன் வெஃகி நளாயனிதான்
மூவாத்துன் புற்றாண் முருகேசா — ஓவாமற்
கெட்டார்க்கு நட்டாரில் லென்பதோ நெஞ்சேநீ
பெட்டாங் கவர்பின் செலல். (கங0)

புலவி

நீளயின்பாற் செல்கெனமா னெஞ்சயர மாவூடி
மூளனுர்கோட் பட்டாண் முருகேசா — கோளகலும்
உப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது
மிக்கற்றா னீள விடல். (கஙச)

புலவி நுணுக்கம்

இன்பி னெழுமையுநீங் கேனென்னக் காந்திமதி
முன்பு புலக்கான் முருகேசா—வன்பதனால்
இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனைக்
கண்ணிறை நீர்கொண் டனள். (௧௩.௨)

ஊடலுவகை

காதற்றுணை மாலையிணைக் கைத்தவிர்த்துச் சீவகன்றான்
மோதமிக்கான் கூடி முருகேசா—ஆதலினால்
ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின். (௧௩.௩.)

முருகேசர் முதுநெறி வெண்பா

முற்றுப்பெற்றது.

கணபதி துணை

முருகேசர் முதுநெறி வெண்பாவின்
செய்யுள் முதற்குறிப் பகராதி

செய்யுள்	பக்கம்
அ	
அண்டமுதல	3
அந்தவேளையிமைப்பவி	10
அந்தணற்கும்	22
அந்திப்பொழுதின்	23
அப்புவிமுற	13
அற்றதுணிமேயாடு	24
அற்றமின்றி	2
அன்பரிடா	2
ஆ	
ஆகமெலிந்தாள்	25
ஆதியையும்	18
ஆர்த்தபொரு	5
ஆத்தொரன்பர்	19
ஆலவாயண்ணை	22
ஆள்வினையான்	14
இ	
இந்தனக்கேலா	15
இன்பினொழுமை	28
இன்னலேவபல்கு	18
இன்னவொற்க	22
ஈ	
ஈண்டிவசவ்வசா	9
ஈண்டுதச	2
உ	
உற்றபிணியும்	23
உறநபுறவும	9
எ	
எச்சிறப்பேய்ந்	16
எத்தவேயோ	6
எய்ததுமக	12
ஒ	
ஒக்கலேவீட்	23
ஒல்லையிற்கண்ணை	25
ஓ	
ஓகையினல்	18
ஓகையினுருக்த	23
ஓங்குதருக்கம்	4
ஓவாச்சிவசமய	21
ஓவிலுழவன்	13
க	
கசிவெநறியா	1
கறுமபயனில	5
கா	
காண்டலினனி	12
காதலமெனகான	27
காதலனேகாருங	26
காதலகுண	28
காதககபிலர்	13
காழுநமுன்	6
கி	
கின்னரமேரா	8
கு	
கும்பமுனிபான	21
கோ	
கோடியாதன்	12
கோதில்சுதரிசன	2
கோவொடுகா	24
ச	
சத்திமுத	19

செய்யுள்	பக்கம்
சத்துருவை	22
சந்தமிகுவாலே	21
சங்கியாசம்	7
சி	
சித்தமுளவல்ல	25
சித்தராமன்	7
சிந்துபதி	11
சீ	
சீலமிலாப்	20
சீவகளீங்க	25
சீவகன்சீறு	15
சூ	
சூரனெதிர்	15
செ	
செம்மைப்பொரு	8
செற்றமிகுபரவை	27
செற்றச்சுயோத	14
சென்னியனீ	11
சே	
சேக்கிழார்	14
சொ	
சொற்றவிடை	16
த	
தக்கன்மதர்	8
தத்திடங்	8
தந்தைக்குணர்த்தி	27
தன்னைவதை	8
தா	
தாசரதியுஞ்	19
தாதையைவெல்	16
தீ	
தீதெனாமிராக்கத	11
தீதையுன்னி	10
து	
துஞ்சுமன	5
துற்றுநர	3
துன்பகல்வோ	23
துன்பமுற்றார்	26
துன்னாவனத்	3
தூ	
தூயபலபத்திரன்	20
தெ	
தெய்வநிதி	10
தெற்றியுதங்	19
தே	
தேசுமலி	1
தேசுருவா	21
தேர்ச்சியய	24
தேவரையுஞ்	1
தொ	
தொக்கிடும்பை	21
தொண்டருக்கேற்	6
ந	
நந்தியெதிர்	19
நம்பனமர்	17
நம்மானார்செய்	16
நா	
நாகவசுக்கள்	7
நாரதனாற்	10
நாள்கவொடு	13
நி	
நித்திரையோர்	20
நீ	
நீதியிற்பாஞ்சாலி	4
நீளையின்பாற்	27
நே	
நேசன்போற்	18
ப	
பற்றறுத்து	9
பற்றிலனங்	7
பற்றினாருப்பசி	25
பற்றுநிரை	17
பா	
பார்க்கவனார்	4
பாண்டவர்செல்வ	11
பாவமெனா	5
பி	
பின்னைகரம்	13
பூ	
பூரிளமையேற்று	23

MAHAMAHOPADHYAYA

செய்யுள்	பக்கம்
பொ	
பொன்னகர்	6
போ	
போகமூவர்த்	26
ம	
மன்னனையிராது	15
மன்றவன்றற்	4
மண்ணியின்பங்	9
மன்னுகிழி	16
மா	
மாண்டுநக	5
மாலுறுத்தி	17
மாழ்கித்தரும	7
மாழ்கிதிதி	21
மாழ்கிவளைவின்	20
மெ	
மெய்த்தமிழ்	2
மெய்தசரும	3
மெய்த்தவ	26
மே	
மேக்குவலை	8
மேயருகரு	24
மேவவிதூரமொருடு	17
மேவாககணவலை	27
மை	
மைந்தனுய்ந்தான்	12
யா	
யாண்டுள	15
வ	
வஞ்சகன்	23
வஞ்சகவானத்த	17
வா	
வாக்கரசர்	10
வாதவூராளி	14
வாரிசுதை	11
வாழ்கணைநக	6
வி	
விஞ்சுகங்கை	9
வெ	
வெஞ்சூதாம்	20
வே	
வேதசன்மா	18
வேதநெறி	4
வேதாதிதிக்கண்	12
வேள்வியிற்	14

செய்யுள் முதற்குறிப்பகராதி முற்றிற்று.

சதகத்திரட்டு

[முதல் பாகம் விலை அணா 9]

இதிலடங்கிய 7 சதகங்களின் பெயர்

1. அறப்பளீசுர சதகம்.
2. குமரேச சதகம்.
3. திருவேங்கட சதகம்.
4. தண்டலையார் சதகம்.
5. கோவிந்த சதகம்.
6 எம்பிரான் சதகம்.
7. சவசங்கர சதகம்.

[2-ம் பாகம் : விலை ரூபா 1]

இதிலடங்கிய 10 சதகங்களின் பெயர்:

1. கைலாசநாதா சதகம்.
2 மஜயங்கொண்டார சதகம்.
3. குருநாத சதகம்
4 அவையாம்பிகை சதகம்.
5 அருணாசல சதகம்
6. அண்ணாமலைச சதகம்.
7. வடவேங்கடநாராயணசதகம்
8. தொண்டைமண்டல சதகம்
9. கோகுல சதகம.
10. திருத்தொண்டா சதகம்.

கட்டளைப் பிரபந்தம்

விலை அணா 8

இதிலடங்கிய 14 கட்டளைகளின் பெயர்:

[வேதாந்தக் கட்டளைகள்]

1. நாநாஜீவவாதக கட்டளை.
2. ஞானக் கட்டளை
3. தத்துவாமிர்தக் கட்டளை
4. வேதாந்த தத்துவக்கட்டளை.
5. வேதாந்த தசாவத்தைக்கட்டளை
6. வேதாந்த தசகாரியக்கட்டளை
7. உபதேச சித்தாந்தக்கட்டளை.
8. உபதேச உண்மைக்கட்டளை.
9. பிரமோபதேசக் கட்டளை.

[சித்தாந்தக் கட்டளைகள்]

10. சிவப்பிரகாசக் கட்டளை.
11. திருவாலவாய்க் கட்டளை.
12. சித்தாந்தக் கட்டளை.
13. சித்தாந்த சாதனக்கட்டளை.
14 சித்தாந்த தசகாரியக்கட்டளை

நீதிநூற்றிரட்டு

விலை அணா 8

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி, நீதிநெறிவிளக்கம்: இவை மூலமும் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பும் : [ஒரே கட்டடம்]